# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பதினோராம் பத்து

## மூன்றாம் திருமொழி - மன்னிலங்கு
## தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்: அறத்தொடுநிற்றல்

** மன் இலங்கு பாரதத்துத் * தேர் ஊர்ந்து * மாவலியைப்
பொன்னிலங்கு திண் விலங்கில் வைத்து * பொரு கடல் சூழ் **
தென்னிலங்கை ஈடழித்த * தேவற்கு இது காணீர் *
என் இலங்கு சங்கோடு * எழில் தோற்று இருந்தேனே 1

இருந்தான் என் உள்ளத்து இறைவன் * கறை சேர்
பருந்தாள் களிற்றுக்கு * அருள் செய்த செங்கண் **
பெருந்தோள் நெடுமாலைப் * பேர் பாடி ஆட *
வருந்தாது என் கொங்கை * ஒளி மன்னும் அன்னே! 2

அன்னே! இவரை அறிவன் * மறை நான்கும்
முன்னே உரைத்த * முனிவர் இவர் வந்து **
பொன் ஏய் வளை கவர்ந்து * போகார் மனம் புகுந்து *
என்னே? இவர் எண்ணும் * எண்ணம் அறியோமே 3

அறியோமே என்று * உரைக்கலாமே? எமக்கு *
வெறி ஆர் பொழில் சூழ் * வியன் குடந்தை மேவி **
சிறியான் ஓர் பிள்ளையாய் * மெள்ள நடந்திட்டு *
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்தார் தம்மையே 4

தம்மையே நாளும் * வணங்கித் தொழுவார்க்கு *
தம்மையே ஒக்க * அருள் செய்வர் ஆதலால் **
தம்மையே நாளும் * வணங்கித் தொழுது இறைஞ்சி *
தம்மையே பற்றா * மனத்து என்றும் வைத்தோமே 5

வைத்தார் அடியார் * மனத்தினில் வைத்து * இன்பம்
உய்த்தார் ஒளிவிசும்பில் * ஓர் அடி வைத்து ** ஓர் அடிக்கும்
எய்த்தாது மண் என்று * இமையோர் தொழுது இறைஞ்சி *
கைத்தாமரை குவிக்கும் * கண்ணன் என் கண்ணனையே 6

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் * கைவளைகள்
என்னோ கழன்ற? * இவை என்ன மாயங்கள்? **
பெண் ஆனோம் * பெண்மையோம் நிற்க * அவன் மேய
அண்ணல் மலையும் * அரங்கமும் பாடோமே 7

பாடோமே? எந்தை பெருமானைப் * பாடி நின்று
ஆடோமே? * ஆயிரம் பேரானை * பேர் நினைந்து
சூடோமே? ** சூடும் துழாய் அலங்கல் * சூடி நாம்
கூடோமே? * கூடக் குறிப்பாகில் நன்னெஞ்சே! 8

நன்னெஞ்சே! நம்பெருமான் * நாளும் இனிதமரும் *
அன்னம் சேர் கானல் * அணி ஆலி கை தொழுது **
முன்னம் சேர் வல்வினைகள் போக * முகில் வண்ணன் *
பொன்னஞ்சேர் சேவடி மேல் * போது அணியப் பெற்றோமே 9

** பெற்றாரார் * ஆயிரம் பேரானைப் * பேர் பாடப்
பெற்றான் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
கற்றார் ஒ! முற்றுலகாள்வர் * இவை கேட்கல்
உற்றார்க்கு * உறுதுயர் இல்லை உலகத்தே 10

**அடிவரவு:** மன்னிலங்கு இருந்தான் அன்னே அறியோம் தம்மை வைத்தார் கண்ணன் பாடோமே நன்னெஞ்சே பெற்றாரார் நிலை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---